**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பெறும் காது கேளாத மற்றும் பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பாசிரியர்களுக்கு ஊதிய மானியம் வழங்கும் திட்டம் – 2015–2016 ஆம் ஆண்டிற்கு திட்டத் தொடராணை மற்றும் ரூ.1,76,40,000/– நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை ( நிலை) எண் 9** **நாள் 16.02.2016**

**மன்மத–மாசி 4,**

**திருவள்ளுவர் ஆண்டு, 2047**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண் 42, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 14.07.2015.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித ந.க.எண்.4334/சிபதி/ 2015, நாள் 21.07.2015.

----------

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 2014–15 ஆம் நிதியாண்டில், காதுகேளாதோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பாசிரியர்கள் மற்றும் பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பாசிரியர்களுக்கு ஊதிய மானியம் வழங்கும் திட்டத்தினை தொடர, தொடராணையும், இத்திட்டத்திற்கென ரூ.2,02,75,000/– (2013–14 ஆம் ஆண்டிற்கான நிலுவைத் தொகை ரூ.29,95,000/–யும் சேர்த்து) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், 2015–16 ஆம் ஆண்டிலும் மேற்படி திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்த வேண்டியுள்ளதால், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பெறும் 40 காதுகேளாதோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் 120 சிறப்பாசிரியர்கள் மற்றும் 9 பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் 27 சிறப்பாசிரியர்கள் ஆக மொத்தம் 147 சிறப்பாசிரியர்களுக்கு, மாதம் ஒன்றுக்கு ரூ.10,000/– வீதம், ஏப்ரல் 2015 முதல் மார்ச் 2016 வரையிலான 12 மாதங்களுக்கு ரூ.1,76,40,000/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்படி, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை அரசு பரிசீலனை செய்து, அதனை ஏற்று, 2015–16 ஆம் நிதியாண்டில், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பெறும் 40 காதுகேளாதோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் 120 சிறப்பாசிரியர்கள் மற்றும் 9 பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் 27 சிறப்பாசிரியர்கள் ஆக மொத்தம் 147 சிறப்பாசிரியர்களுக்கு, மாதம் ஒன்றுக்கு ரூ.10,000/– வீதம், ஏப்ரல் 2015 முதல் மார்ச் 2016 வரையிலான 12 மாதங்களுக்கு ரூ.1,76,40,000/– (ரூபாய் ஒரு கோடியே எழுபத்தாறு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், இத்தொகையினைப் பெற்று வழங்க மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

[த.பி.பா]

**4.** மேலே, பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கான நிதியொதுக்கம் திருத்திய மதிப்பீடு **2015–2016**–ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.** மேலே, பத்தி **3**–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

| | |
|---|---|
| **" 2235–சமூக பாதுகாப்பும் நலனும் – 02– சமூகநலன் – 101– மாற்றுத் திறனாளிகள் நலன் – I–திட்டத்தில் சேராதது – AR–காதுகேளாதோருக்கான சிறப்புப் பள்ளி – 09–உதவித் தொகை – 03–குறிப்பிட்ட திட்டங்களுக்கு உதவித் தொகை." (து.தொ.கு. 2235–02–101–AR–0932).** | ரூ.1,44,00,000/– |
| **" 2235–சமூக பாதுகாப்பும் நலனும் – 02– சமூகநலன் – 101– மாற்றுத் திறனாளிகள் நலன் – I–திட்டத்தில் சேராதது – AA–பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளி – 09–உதவித் தொகை – 03–குறிப்பிட்ட திட்டங்களுக்கு உதவித் தொகை." (து.தொ.கு. 2235–02–101–AA–0936).** | ரூ.32,40,000/– |

**6.** இவ்வாணை, நிதித் துறையின் அலுவல்சாரா எண் **4021**/நிதி(சந)/**2016**, நாள் **11.02.2016**–ல் பெறப்பட்ட இசைவின்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–**78.**
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழிகாக)
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
மாநில கணக்காயர், சென்னை–**18**/பெயரில்
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–**35.**

**நகல்**

நிதித் (சந) துறை, சென்னை–**9.**
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்